DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.139/20

Deposition of Witness: PW 3

| | |
|---|---|
| Name பொன்னுத்தாய் | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.09.2022

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் பிசிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்துவருகிறேன். அசா1 தெரியும். எதிரியை தெரியாது. 21ம் தேதி மாதம், வருடம் தெரியாது. எனது மகனுக்கு குழந்தை பிறந்திருந்தது. நான் குழந்தையை பார்ப்பதற்காக சென்றேன். தேனியிலிருந்து என்னை அரசு பேருந்தில் ஏற்றிவிட்டார்கள். நான் ஊருக்கு சென்றுவிட்டேன். அதற்கு பிறகு எனது கணவருக்கு விபத்து ஏற்பட்டுவிட்டதாக எனது மகன் என்னிடம் சொன்னார். எனது கணவர் புல் அறுப்பதற்காக சென்றபோது பிசிபட்டி வாட்டர் டேங்க அருகில் வரும் போது பஸ் அடித்துவிட்டதாக சொன்னார். எனது கணவரை க.விலக்கு மருத்துவமனையில் சேர்த்திருப்பதாக எனது மகன் சொன்னார. நான் அங்கு போனபோது எனது கணவரை மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துவிட்டார் நான் மதுரை அரசு மருத்துவமனை சென்று என் கணவரைபார்த்தேன். அதற்கு அடுத்து ஒரு நாள் கழித்து என் கணவர் மருத்துவமனையில் சிகிச்சையிலிருக்கும் போது இறந்துவிட்டார். விபத்து சம்மந்தமாக எனது மகன் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

என் கணவருக்கு ஏற்பட்ட விபத்திற்கு நானும் எனது வாரிசுகளும் நஷ்ட ஈடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். நஷ்ட ஈடு பெறுவதற்காக முதல் விசாரணையில் கூறியுள்ள விபரங்களுக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.